REGD. No. M. 6311

PHONE No. 55630

தனி இதழ்
ஒரு அணு
இலங்கையில் 10 சதம்

மலர் 1] [இதழ் 256

சந்தா விபரம்
உள்நாடு (இலங்கை உட்பட)

ஆண்டு	ரூ. 24—0—0
6 மாதம்	ரூ. 12—0—0
3 மாதம்	ரூ. 6—0—0

வெளிநாடு:

ஆண்டு	ரூ. 30—0—0
6 மாதம்	ரூ. 15—0—0
3 மாதம்	ரூ. 7—8—0

நம் நாடு

தி.மு.க. தின இதழ் ஆசிரியர்: அண்ணாதுரை

"THE NAM NADU" A TAMIL DAILY : THE OFFICIAL ORGAN OF: THE D.P.F

சென்னை: பங்குனி 28 – சனி (10–4–54) ★ ★ ★ வெளியூர்: பங்குனி 29 – ஞாயிறு (11–4–54)

தொழில் துறையில் தென் இந்தியாவின் நிலை

—(:)—

யூனியன் சர்க்காரின் போக்கு 'கோபமூட்டு'வதாக இருக்கிறது!

தொழில் பெருகினால் ஒழிய வாழ்க்கைத்தரம் உயர வழியில்லை!

டில்லி செய்கைக்கு சென்னை தொழில் துறையினர் கண்டனம்

சென்னை, ஏப். 10—

"தொழில் துறையில் ஏற்கனவே வளம் பெற்றுள்ள பகுதிகளை மேலும் வளப்படுத்துவதையே யூனியன் சர்க்கார் தனது தொழில் முன்னேற்றக் கொள்கையாகக் கொண்டிருப்பது கண்டு வருந்துகிறேன். இந்தியாவின் மற்ற மாநிலங்களின் சீர்குலைவையும், கோபம் ஏற்படுகிற வகையில், புதிய புதிய தொழில்களை நிர்மாணிக்க பம்பாய்க்கோ அல்லது கல்கத்தாவிற்கோ அனுமதி கொடுத்துவரும் யூனியன் சர்க்கார் போக்கையும் நான் குறிப்பாகச் சுட்டிக் காட்டுகிறேன்."

"பொருளாதார கோணத்திலிருந்தும் சரி, போர்த் திறனைப் பொறுத்தும் சரி, வட்டாரவாரியாக தொழில்களை நிர்மாணிப்பதிலேயே எனக்கு நம்பிக்கையுண்டு. இந்தியா முழுதிலும் 3,760 லட்சம் மக்கள் உள்ளனர். இதில் 600 லட்சம் மக்கள் தென்னிந்தியாவில் உள்ளனர். இவர்களில் பெரும்பான்மையோர் நன்கு கற்று, வேலை தேடிக்கொண்டிருப்பவர்கள். தொழில் வளம் ஏற்படுவதின் முக்கியத்துவத்தை சென்னை, திருவாங்கூர்—கொச்சி, மைசூர் முதலிய அரசாங்கத்தார் முழு அளவில் அறிந்துகொண்டதாகத் தெரியவில்லை. அப்படி அறிந்துகொண்டிருப்பார்களானால், பல முக்கிய தொழில்களை தெற்கில் நிர்மாணிக்க வேண்டுமென விடாமல் முயன்றிருப்பர்,"

—என, சென்னை டிரேட்ஸ் அசோசியேஷன் சிரத்தார் தலைவர் என். அனந்தராமகிருஷ்ணன் அவர்கள், அச்சங்கத்தின் ஆண்டு விழாவில் பேசும்பொழுது குறிப்பிட்டார்.

(4-ம் பக்கம் பார்க்க)

திருத்தணி தமிழர்கள் முறையீடு

ஆந்திர மந்திரி நிராகரிப்பு

காரணம் கூறுவதில் ஓர் விந்தை!

விஜயவாடா, ஏப். 9—

திருத்தணி தாலுகாவில் தமிழர்கள் பெருவாரியாக இருந்தும் தமிழில் கணக்கு வைக்கக்கூடாதென்று ஆந்திர அதிகாரிகள் வற்புறுத்துவதாக எடுத்துக் காட்டிய போது, தெலுங்கு, ஆங்கிலம், இந்தி தவிர மற்ற மொழிகளில் வியாபாரிகள் கணக்கு வைக்க அனுமதிக்க முடியாதென்று ஆந்திர மந்திரி பட்டாபிராமராவ் கூறிவிட்டார்.

பிற மொழிகள் தெரிந்த அதிகாரிகள் இல்லாததே காரணமென்று மந்திரி கூறினார்.

த. நா. காங்கிரஸ் தலைவர் பதவி

காமராசர் விலகுகிறார்

சென்னை, ஏப். 10—

முதன் மந்திரி பதவியை ஏற்றுக்கொள்ள முடிவு செய்ததை யொட்டி, தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் பதவியிலிருந்து விலகிவிட காமராசர் முடிவு செய்துள்ளார்.

தூத்துக்குடி சதி வழக்கு

தீர்ப்பு ஒத்திவைப்பு

தோழர்கள் கே. வி. கே. சாமி உள்பட 79 பேர் மீதுள்ள தூத்துக்குடி சதி வழக்கில் 10-ந் தேதியன்று தீர்ப்பளிக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டிருந்தது. இத்தீர்ப்பு 14-ந் தேதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது என்று அறிவிக்கப்படுகிறது.

இந்தியாவின் தாராளம்!

—:—

பர்மா தர வேண்டிய கடனுக்கு சலுகை!

புதுடில்லி, ஏப்ரல் 9—

"இந்தியாவுக்குப் பர்மா தர வேண்டியிருந்த கடன் தொகையான ரூ 68 கோடியை ரூ. 20 கோடியாகக் குறைத்துக்கொள்ள இந்திய சர்க்கார் இணங்கிவிட்டது. இந்த 20 கோடி ரூபாயில் 15 கோடியே 60 லட்சம் ரூபாயை இந்தியாவுக்கு அரிசி விற்பனை செய்வதில் தள்ளுபடி செய்வதின் மூலம் பர்மா கொடுக்கும்.

1954ல் பர்மாவிடமிருந்து இந்தியா 9 லட்சம் டன் அரிசி வாங்கும் வகையில் இந்தியா கொடுக்க வேண்டிய பணத்தில் ரூ. 15,60,00,000 ஆகும். இந்தத் தொகை இந்தியாவுக்குப் பர்மா கொடுக்கவேண்டிய ரூ. 20 கோடி கடனில் கழித்துக்கொள்ளப்படும்.

மீதியுள்ள 4,40,00,000 ரூபாய் கொழும்பு திட்டப்படி பர்மாவுக்கு அளிக்கப்படும் நிதி உதவியாக பாவிக்கப்படும்."

ஆந்திர அமைச்சர் குழு அசைந்தாடுகிறது!

சஞ்சீவையா விலகி விடுவாராம்!

கர்நூல், ஏப். 8—

ஆந்திர மாநிலப் பிரதமர் பிரகாசம், அமைச்சர் பட்டாபிராமராவிடம் ஒப்படைக்கப்பட்டிருந்த 'பெண்கள் நலம்' எனும் இலாகாவைத் தாமே ஏற்றுக்கொண்டதோடு நில்லாமல், அமைச்சர் சஞ்சீவையாவிடம் இருந்துவந்த 'இட்டமிடல்' இலாகாவையும் ஏற்றுக் கொள்ளலாம் என யோசித்துக்கொண்டிருக்கின்றாராம்.

இது பற்றிய பிரச்னை ஏப்ரல் 2-ல் கூடிய அமைச்சர் குழு கூட்டத்தில் பேசப்பட்டதாகவும், பல அமைச்சர்கள் அக்கூட்டத்தில் இல்லாததால், முடிவு காணுமல் தள்ளி வைத்ததாகவும் தெரியவருகிறது.

ஆந்திர மாநிலத்தில் புதிதாகத் துவக்கப்பட்டிருக்கிற தேசிய நல திட்டத்திற்கான முக்கிய அதிகாரிகளை நியமிப்பதில், தம்விருப்பப்படி நடந்துகொண்டார் எனவும், அப்படி நியமிக்கப்பட்ட அதிகாரிகளை எல்லாம் புறக்கணித்துவிட்டு, பிரதமர் பிரகாசம், ஏற்கனவே இருந்த ரெவின்யூ அதிகாரிகளை நியமித்து இருப்பதாகவும், அதனாலும் இருவருக்கும் இடையில் மனக்கசப்பு ஏற்பட்டு இருப்பதாகவும் சொல்லப்படுகிறது.

இதன் எதிரொலியாக, அமைச்சர் பதவியிலிருந்து தாம் விலகிக்கொள்ளப்போவதாக சஞ்சீவையா தனது நண்பர்களிடம் கூறியுள்ளதாக நம்பப்படுகிறது.

ரயில்வே சிப்பந்திகளுக்கு புதிய விடுதிகள்

புதுடில்லி, ஏப். 8—

கடைமுதல் ஆண்டில் சிப்பந்திகளுக்குப் புதிய விடுதிகளை நிர்மாணிக்க ரயில்வே இலாகா 4½ கோடி ரூபாய் ஒதுக்கியிருக்கிறது.

இத்தொகையில், 95 சதவிகிதத்திற்கு மேல் 3, 4-வது பிரிவு சிப்பந்திகளின் தேவைகளைப் பூர்த்தி செய்யப் பயன்படுத்தப்படும். தற்போதுள்ள இடங்களை அபிவிருத்தி செய்ய இத்தொகையில் ஒரு பகுதி செலவிடப்படும்.

சிப்பந்திகளின் சௌகரியங்களுக்காக ரயில்வே இலாகா மொத்தம் ரூ. 10 கோடி ஒதுக்கியுள்ளது.

ரயில்வே நிலையத்தில் கைகலப்பு!

கல்கத்தா, ஏப். 9—

இங்கிருந்து 6 மைல் தூரத்தில் உள்ள பாலி ரயில்வே நிலையத்தில் ரயில்வே ஊழியர்களுக்கும் பிரயாணிகளுக்குமிடையே 20 நிமிடம் நடைபெற்ற கைகலப்பில் ஒருவர் கொல்லப்பட்டார்; 24 பேர்கள் காயமுற்றனர் என்று தெரிகிறது.

"ஆச்சாரியார் ஆட்சியில் மற்ற அமைச்சர்கள் வெறும் பாவைகள்!"

—o—

அவருடைய வீழ்ச்சியை காமராசர் படிப்பினையாகக் கொள்ள வேண்டும்

இருவருக்குமுள்ள குண சிறப்புகளை 'தமிழ் நாடு' ஆராய்கிறது!

"திரு. சி. இராசகோபாலாச்சாரியார் தம்முடைய கூட்டாளிகளான அமைச்சர்களுக்கு மதிப்புக் கொடுக்காமல் அவர்களை வெறும் பொம்மைகளாக நடத்தி வந்தார்.

"முன்னிருந்த முதலமைச்சருடைய குற்றங்களிலிருந்தும், தவறான கொள்கைகளிலிருந்தும், புதிய முதலமைச்சர் விலகி நடப்பாரானால், அவர் தமக்குக் கிடைத்த வாய்ப்பை ஒரு மாபெரும் வெற்றியாகச் செய்துகொள்ளலாம். அவர் அப்படிச் செய்வார் என்று நாம் எதிர்பார்க்கிறோம்.

(4-ம் பக்கம் பார்க்க)

அ. நி. சபையைக் கலைக்க முயற்சி!

டாக்கா, ஏப். 9—

பாகிஸ்தான் அரசியல் நிர்ணய சபையைக் கலைப்பதற்காகக் கிளர்ச்சி நடத்துவதற்காக கிழக்கு பாகிஸ்தான் முதல் மந்திரி ஏ. கே. பஸ்லுல்ஹக் கட்சி ஒரு செயல் கமிட்டி அமைத்துள்ளது.

காரைக்காலில் தி. மு. கழகத் தொண்டர்கள் அணிவகுப்பு

பிரெஞ்சிந்திய இணைப்பை யொட்டி, காரைக்காலில் நடைபெற்ற விடுதலைப்போரில், தி. மு. கழகத்தினரும், தேசிய காங்கிரசைச் சேர்ந்த தொண்டர்களும் கொடிகளைத் தாங்கி முழக்கமிட்டுக் கொண்டு முக்கிய தெருக்கள் வழியாகச் செல்லுகையில், போலீசார் அவர்களைத் தடுத்து நிறுத்தி, கொடிகளைப் பிடுங்கினர்; 18 பேர்களைப் போலீசார் கைது செய்து போலீஸ் ஸ்டேஷனுக்கு அழைத்துச் சென்றனர்; அங்கு போலீசார், தொண்டர்களை அடித்துத் துன்புறுத்தியதாகத் தெரிகிறது.

நம் நாடு

தி.மு.க. தின இதழ் — ஆசிரியர்: அண்ணாதுரை

சென்னை 10—4—54 சனி

மீசையில் மண் ஒட்டவில்லை......!

"ஆச்சாரியாருக்கு உடல் நலமில்லை—ஆகவே, விலகினார்."

"இல்லை; அவர் டில்லிக்கு அழைக்கப்படுகிறார், கட்ஜூவின் ஸ்தானத்திற்கு!"

"கெர் திரும்பி வந்துவிட்டதே, ஆச்சாரியாருக்கு லண்டன் வாசம் தரத்தான்; கட்டாயம் ஆச்சாரியார், இந்தியத் தூதுவராக லண்டன் செல்வார்!"

"அதுவுமில்லை; ஆச்சாரியாரை இந்தோ-பாகிஸ்தான் பிரச்னைகளைக் கவனிக்கும் விசேஷ பொறுப்பாளராக நியமிக்கத் திட்டம் போட்டிருக்கின்றனர்!"

"எப்படியும் விரைவில், நேரு, ஆச்சாரியாரை டெல்லிக்கு அழைப்பார்!"

* * *

இதுவும், இன்னும் பலவிதமாகவும் ஆச்சாரியாரின் அதிர்ஷ்டத்தை கணக்கிடும் ஜாதகங்கள் நாள்தோறும் தேசிய பத்திரிகைகளில் கணிக்கப்படுகின்றன.

ஆச்சாரியாரின் வார்த்தைக்கு தமிழக அரசியல் அரங்கிலே மதிப்பில்லை. அவர் ஆண்ட இரண்டாண்டுகள் இரத்தக் கறை படிந்த நாட்களாக ஓடிவிட்டன. காங்கிரசுக்கு நாட்டிலே இருந்த செல்வாக்கு மங்கியது மாத்திரமல்ல; தேசியத் தோழர்களே பார்த்து வெட்கப்படுமளவு ஜனநாயகப் பண்பற்ற முறையில் அவர் ஆட்சி நடைபெற்றது. வேறு பல காரணங்கள் ஆயிரமிருக்கலாம்; ஆனாலும், ஆச்சாரியார் வருங்காலத்தில் மக்கள் முன்னிலையில் வந்து நிற்கும் யோசனையில் பணியாற்றவில்லை என்பதை உணர்ந்த காங்கிரசிலே ஒரு பகுதியினர், அவரை ஆட்சி பீடத்தை விட்டு போகச் சொன்னார்கள்.

கூடியிருக்கும் அத்தனை கட்சித் தோழர்களின் தயவிலே தான் அவர் பதவிக்கு வந்தார். நன்கு ஆராய்ந்தால் காமராசரின் பெருந்தன்மையினால்தான் ஆச்சாரியார் இரண்டாண்டுகளுக்குமுன் பதவியேறினார். இருந்தும், பதவி கிடைத்தவுடனே சுற்றியுள்ளவர்கள் அத்தனை பேரையும் தூக்கி எட்டி வைத்துவிட்டு, தான்தோன்றித்தனமாக, தன் மனதுக்கு எது பட்டதோ அதையே செய்வது என்ற பாதுஷாக்கள், நவாபுகள் முறையில் சர்வாதிகாரியாக மாறினார், ஆச்சாரியார்!

தனிப்பட்ட மனிதன் தன் விருப்பப்படி எதையும் செய்வதை 'ஜனநாயக' முறை ஒரு நாளும் ஒத்துக் கொள்ளாது.

ஆச்சாரியாரின் கல்வித் திட்டத்தை எதிர்த்து சட்டசபையில் தீர்மானம் நிறைவேற்றினர்.

'புதிய கல்வித் திட்டம் வேண்டாமென்று கூறினர், தமிழ் நாடு காங்கிரஸ் கமிட்டியினர்!

'யார் எது சொன்னாலும் கேளேன்' என்ற எதேச்சாதிகாரத் தன்மையில் ஆச்சாரியார் சென்றார்.

அதன் முடிவு, "உடல் நலமில்லை—ஆகவே, விலகுகிறேன்," என்று கூற வேண்டிய பரிதாப நிலையில் கொண்டு வந்து விட்டது.

சென்ற பதினைந்து ஆண்டுகளாக தமிழகத்தின் கிரீடத்தை தலையில் சூட்டிக்கொள்ள திட்டமிடும் ஆச்சாரியார் ஒவ்வொரு முயற்சியிலும் தோல்வியடைந்து கொண்டே இருக்கிறார். அந்தத் தொடரில் ஏற்பட்ட மகத்தான கட்டம் தான் இப்பொழுது நடந்த தோல்விப் படலம்.

இதிலே நகைப்பிற்கு உரியது என்னவென்றால், இந்தத் தோல்வி படலத்தை, ஆச்சாரியாரின் உயர்வுக்கு ஊன்றுகோல் என்ற முறையில் தேசியப் பத்திரிகையில் பிரசுரிக்க முயற்சிப்பதும், 'ஆச்சாரியார் அசகாய சூரர்; அவர் பின்னால் வரப்போகும் காமராஜர் ஆளும் திறமையற்றவர்!' என்று, ஓரே எழுத்தில் ஆச்சாரியாரின் தோல்வியை மறைத்து, காமராசரின் மதிப்பைக் குறைத்துக் கணக்கிட முயற்சிப்பதும்தான்!

'குப்புற விழுந்தாலும் மீசையிலே மண் ஒட்டவில்லை' என்று பெருமை பேசுவது, பலசாலியிடம் தோல்வியடைந்த பரிதாப பயில்வானின் வழக்கம்!

அதுபோல, அவர் முயன்றும் முடியாமல், அவர் சேவடி தொழும் தாசர் முயன்றும் முடியாமல்போன விஷயத்தை அவருடைய வெற்றிக்கு வழி என்று கூறித் தங்கள் ஏமாற்றத்தை மறைத்துக்கொள்கின்றனர், தேசியத் தோழர்கள்!

இந்த நேரத்திலேகூட, ஆச்சாரியாரை திரை போட்டு மறைத்து, 'உள்ளுக்குள் இருப்பது உங்களுக்குத் தெரியாது!' என்று மந்திரம் பேச முயற்சிக்கின்றனர்.

'வருகின்றவர், போகின்றவரின் கால் தூசிக்குச் சமானமானவர்' என்று, வருகின்றவரை சிறுமைப்படுத்த எண்ணுகின்றனர்.

இது, அவர்களுடைய தாழ்மையான எண்ணத்தை வெளிப்படுத்துகிறதே தவிர, உண்மையை மக்களுக்கு விளக்கவில்லை.

ஜனநாயக நாட்டிலே, மக்களின் வாக்கை எவன் பெறுகிறானோ, அவன் அரசாளத் தகுதிபெறுகிறான். மக்களின் நம்பிக்கைக்கு எவன் பாத்திரமாகிறானோ, அவனே, ஆட்சிபீடத்தில் அமர அதிகாரம் பெற்றவனாகிறான்.

இந்த அடிப்படையில் மக்கள் பிரதிநிதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட எவரும் மந்திரியாக வருவதில் நாம் ஆட்சேபனை செய்து பயனில்லை—செய்வதும் தவறுங்கூட!

ஆச்சாரியார், வழக்கறிஞர்—இருந்தும், ஆட்சிபீடத்தில் தோல்வியுற்றார்!

ஓமந்தூரார், அவ்வளவு உயர்ந்த பட்டங்கள் பெற்றவரல்ல—இருந்தும், நல்லவிதமாகப் பணியாற்றிச் சென்றார்!

இதுவேதான், காமராசருக்கும் நாம் கூறும் பாடம்!

ஆட்சி பீடத்திலே அமரும்பொழுது, மக்கள் நலனிலே கவலையிருந்தால், எந்தக் குறையாகிலும் நிவர்த்தி செய்யப்படக் கூடியதாகிவிடும்!

கொள்கையிலே பிடிப்பிருந்தால், அரசாங்க நிர்வாகம் தனக்கு மீறிப் போய்விடாது!

ஆச்சாரியாரின் அதிதீவிர மூளைகூட, அவர் எதேச்சாதிகாரமாக போனபொழுது அவரைக் காப்பாற்ற முடியவில்லை.

பிரகாசத்தின் 'மில் அடைப்புத் திட்டம்,' அவருடைய பட்டம், உழைப்பு, நீண்டகால உழைப்பு முதலிய பல அம்சங்களாலும் காப்பாற்ற முயற்சித்தும் நிறைவேற்ற முடியாமல் போய், கடைசியில் அவரையே கவிழ்த்தது.

ஆட்சி பீடத்தின் சூட்சமம் எங்கே இருக்கிறது என்பதை அந்த இடம் செல்பவர்கள் உணர்ந்து கொள்ளாததினால் ஏற்பட்ட விளைவுகள்தான் இவை!

ஆச்சாரியாரின் தோல்வியை மறைத்து, அவருடைய பெருமையை உயர்த்தி, அதே நேரத்தில் அவரை ஒழித்தவர்களின் தன்மையை குறைத்து, நாட்டு மக்களிடையே ஆரம்பத்திலேயே அவநம்பிக்கையை உண்டாக்குவது, தேசியப் போர்வையிலிருக்கும் ஆரியத்தின் செயலாகும்!

இந்த நிலை போக, ஆரியத்தைத் தழுவ நினைத்தால் புதிய தலைவர் அந்த அணையிலேயே அழிந்து விடுவார்—ஏனென்றால், திராவிடர் வாழ்வதை ஆரியம் ஒருநாளும் அனுமதிக்காது!

ஆகவே, துணிந்து, ஆச்சாரியார் செய்த அபத்தங்களை ஒழித்து, நாட்டிலே நல்ல காரியங்கள் செய்ய முனைய வேண்டும்.

தமிழரின் நெஞ்சில் வீண் குரோதத்தைத் தூவிய நஞ்சு போன்ற திட்டமான 'புதிய கல்வித் திட்டத்'தை ஒழித்துக்கட்டுவது, ஆச்சாரியார் செய்த அக்கிரமங்களில் ஒன்றைக் களைந்தது மாதிரி!

இதுமாதிரி, இன்னும் அரசாங்கத் துறையிலும், மற்றத் துறைகளிலும் பல வேலைகள் இருக்கின்றன.

இந்த உண்மைகளை காமராசர் உணர்வாரா—உணர்ந்து, உடனே செயலாற்றுவாரா? எல்லாம் திங்களன்று தெரிந்துவிடும்!

இலங்கை இந்தியருக்கு மேலும் இன்னல்கள்

கொத்தலாவலயின் புதிய உத்தரவு

கொழும்பு, ஏப். 7—

சட்டபூர்வமான வாச பர்மிட்டுகளுடன் இலங்கையிலிருக்கும் இந்தியர்கள், இனிமேல் இந்தியாவிலிருந்து தமது மனைவியரையும், குழந்தைகளையும் இலங்கைக்கு அழைத்துக்கொண்டுவர முடியாது.

ஏப்ரல் 1-ந் தேதி இலங்கை சர்க்கார் இப்படி முடிவு செய்திருக்கிறார்களென்பதைகுடியேற்ற கண்ட்ரோலர் ஜெபமானே நிச்சயப்படுத்தினார்.

ஏற்கனவே பர்மிட்டுகளுடன் இலங்கையிலுள்ளவர்களின் மனைவிமார்களுக்கும், குடும்பத்தினருக்கும் புது வாச பர்மிட்டுகள் அளிப்பதை நிறுத்தி வைக்கும்படி தனக்கு உத்திரவிடப்பட்டிருப்பதாக கண்ட்ரோலர் கூறினார்.

மந்திரி சபை கமிட்டி இன்னும் தனது முடிவான சிபார்சுகளை சமர்ப்பிக்கவில்லை; ஆயினும் இதற்கிடையே தற்காலிக ஏற்பாடாக சர்க்கார் இப்படி முடிவு செய்திருக்கின்றனர்.

எனவே, பர்மிட்டுகள் பெற்றுள்ள இலங்கை இந்தியரின் மனைவியர் இப்போது இந்தியாவுக்கு வந்திருந்தால் அவர்கள் திரும்பிப்போக முடியாது என்பதே நிலைமை.

தடை செய்வர்?

புதுடில்லி, ஏப் 8—

ரேடியோ சேவாவிலும், ரேடியோ சிலோனிலும் இந்திய வர்த்தகர்கள் விளம்பரம் செய்வதைத் தடை செய்வது பற்றி இந்தி இலாகா யோசித்து வருகிறது.

உணவுத் தானியங்கள்

விலைகள் இறங்குமுகமா?

புதுடில்லி, ஏப். 8—

இவ்வாண்டு உணவு தானியங்களின் விலை இறங்குமுகமாயிருக்கிறதென்றும், சில இடங்களில் விலை அப்படியே கூடுதல் குறைவு இல்லாமல் இருக்கிறதென்றும், ஒரு சில இடங்களில் சிறிது கூடியிருக்கிறதென்றும், பெரிய நாடான இந்தியாவில் இவ்விதம் இருப்பது இயற்கைதானென்றும் இந்திய மக்கள் சபையில் உணவு மந்திரி தெரிவித்தார்.

தடைக்குக் காரணம்!

எல்லைப்புற மாநிலத்தில் லீகின் சுயநலம்

லாகூர், ஏப். 8—

வடமேற்கு எல்லைப்புற மாகாணப் பிரதமர் சர்தார் அப்துல் ரஷீத், கான் சகோதரர்கள் மீதுள்ள தடை உத்தரவு நீக்கப்படாதென கூறினார். முஸ்லிம் லீக் ஊழியர் கூட்டமொன்றில் கலந்துகொண்டு விட்டுத் திரும்பியதும் அவர் மேற்கண்டவாறு அறிவித்தார்.

அவர்கள் மீதுள்ள தடையை நீக்கினால், சட்டசபைக்கு வெளியே முஸ்லிம் லீக், ஒரு வெற்றிகரமான கட்சியாக இயங்க முடியாதென, பத்திரிகைகள் கருதுகின்றன.

இந்தியாவுக்கும் அமெரிக்க உதவி!

35 கோடி ரூபாய் அளிக்க யோசனை

வாஷிங்டன், ஏப்ரல் 10—

வருகிற ஜூலை 1-ந் தேதி தொடங்கும் நிதி ஆண்டிற்கு இந்தியாவுக்கு பொருளாதார, தொழில் நுட்ப உதவி அளிப்பதற்காக 8½ கோடி டாலர் (சுமார் 35 கோடி ரூபாய்கள்) ஒதுக்க வேண்டுமென அமெரிக்க காங்கிரசில் ஜனாதிபதி ஐசன்ஹவர் கோரிக்கை சமர்ப்பித்துள்ளார்.

வேறு எந்த நாட்டுக்கும், பொருளாதார, தொழில் நுட்ப உதவியாக இவ்வளவு தொகை அளிக்கப்பட மாட்டாது என்று வெளிநாட்டுக் காரியதரிசி டல்லஸ் சமீபத்தில் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறினதாவது:—

"சுதந்தர நிர்வாகத்தில், இந்திய அரசாங்கம் குறிப்பிடத்தக்க பரீட்சை ஒன்றை நடத்துகிறது; கம்யூனிஸ்டுப் போலீஸ் திட்டப்படி சமீபத்திலுள்ள சீனா நடத்தும் முறைக்கு இது முற்றிலும் வேறுபட்டதாகும்; இந்தியாவின் ஐந்து ஆண்டுப் பொருளாதாரத் திட்டம் வெற்றியடைய வேண்டுமென்றும், இதற்காக தொடர்ந்து உதவியளிப்பது அமெரிக்காவின சுய நன்மைக்கு பயன்படுவதாக இருக்குமென்றும் நாங்கள் நம்புகிறோம்."

நீதி மன்றத்தில் முன்னாள் பிரதமர்

டெஹ்ரான், ஏப். 8—

ஈரானின் முன்னாள் பிரதமர் டாக்டர் முசாதிக் தனக்குத் தரப்பட்டுள்ள மூன்றாண்டு சிறைவாசத்தை எதிர்த்து அப்பீல் செய்துள்ளார். அந்த அப்பீலை விசாரிக்க இராணுவ நீதிமன்றத்திற்கு அவர் கொண்டுவரப்பட்டதும், 'என்னை விசாரிக்க உங்களுக்கு அதிகாரமோ, அருகதையோ இல்லை; என உரக்கக் கூவினார்.

'உங்களின் வேலை என்ன?' என்று இராணுவ நீதி மன்றத் தலைவர் அவரை வினவியபோது, 'நான் தற்காலிகமாகக் கைதியாக இருந்தபோதிலும், இன்னும் நான்தான் ஈரானின் பிரதமர்,' என்று பதிலளித்துவிட்டு, 'ஏன் என்னை நான்கு மாதமாக சிறையில் வைத்திருக்கிறீர்கள்? என்னுடைய அப்பீலை ஏன் இவ்வளவு காலம் ஒத்திப் போட்டீர்கள்?' என்றெல்லாம் முதுகிழவர் முசாதிக் கேள்விக் கணைகளைத் தொடுத்தார்.

முடிந்துவிட்டதாம்!

காராச்சி, ஏப். 7—

பாகிஸ்தானிற்கு இராணுவ உதவி அளிப்பதற்காக அமெரிக்கா, அனுப்பியிருந்த இராணுவ தூதுக் குழு, 18 நாட்கள் பாக். நாட்டைச் சுற்றி, அங்குள்ள, இராணுவ நிலையங்கள், விமான தளங்கள், கடற்படை இலக்காக்கள் இவைகளை எல்லாம் பார்த்துவிட்டு அமெரிக்காவிற்கு பயணமாகிவிட்டது. அமெரிக்க முதல்வர் ஐசன்ஹோவரிடம் அக்குழு, பாகிஸ்தானிற்கு, எத்தகைய, இராணுவ தளவாடங்கள் அமெரிக்கா உதவலாம் என்பது பற்றி தான் நேரில் கண்டுள்ள உண்மைகளின் அடிப்படையில் விரிவான தொகுப்பு, அறிக்கையைத் தரும். அத்துடன் அக்குழுவின் வேலைகள் முடியுமாம்!

நீக்கமாட்டார்!

லாகூர், ஏப். 8—

செஞ்சட்டை நிலையத்தின் மீதுள்ள தடையை நீக்கப் போவதில்லை யென்று வடமேற்கு எல்லை மாநில முதல் மந்திரி அறிவித்தார்.

கிழக்கு வங்கம் தந்த தீர்ப்பு

இந்தி வெறியர்களுக்கு ஓர் படிப்பினை

—(:)—

மதுரை பொதுக்கூட்டத்தில் தோழர்கள் முழக்கம்!

மதுரை, ஏப். 5—

மதுரை கீழ மார்க்கெட் திடலில் நேற்று மாலை, நகர தி. மு. கழகச் சார்பில், ஓர் மாபெரும் பொதுக்கூட்டம் நடைபெற்றது. கூட்டத்திற்கு மாணவர் முன்னேற்றக் கழகச் செயலாளர் தோழர் பி. எஸ். மணியன் தலைமை தாங்கினார். தோழர்கள் கே. எஸ். ராசமான், கே. எஸ். சந்தானம், எஸ். முத்து ஆகியோர் பேசினர். கூட்டத் துவக்கத்தில் தோழர் ஷெரீப் இயக்கப் பாடல்கள் பாடினார். பல்லாயிரக்கணக்கான மக்கள் கூடியிருந்தனர்.

தலைவர் முன்னுரைக்குப் பின், தோழர் கே. எஸ். ராஜமான் பேசுகையில், "ஆணவத்தோடு ஆட்சி புரிந்த ஆச்சாரியார் போய் விட்டார்; காமராசர் வருகிறார்; என்றாலும், இருவரும் பிற்போக்குக் கொள்கையுடைய காங்கிரஸ்காரர்கள் என்பதால் எங்களுடைய நடைமுறையில் எவ்வித மாறுதலுமிருக்காது," என்றார்.

அடுத்துப் பேசிய தோழர் கே. எஸ். சந்தானம் அவர்கள், "வெள்ளை ஏகாதிபத்தியத்திடமிருந்து கயானா விடுதலை கோருகிறது; அதைப் போன்றே, வடநாட்டு ஏகாதிபத்தியத்திடமிருந்து நாம விடுதலைக்காக இருக்கும்; நம்மைக் காட்டிலும் சிறிய நாடான கயானாவின் விடுதலைக் கோரிக்கையை ஆதரிக்கும் கம்யூனிஸ்டு நண்பர்கள் நமது கோரிக்கையை ஆதரிக்க மறுப்பது ஏன்?" என்றார்.

இறுதியாக மதுரை நகர தி.மு. கழக செயலாளர் தோழர் எஸ். முத்து பேசுகையில், "பாகிஸ்தானின் ஒரு பகுதியான வங்கத்திலே சமீபத்தில் நடைபெற்ற தேர்தலின் முடிவுகள் இந்த நாட்டிலே உள்ள இந்தி வெறியர்களுக்கு நல்லதொரு பாடம்; வங்கத்து மக்களின் தாய் மொழியான வங்காளத்தைப் புறக்கணித்து உருது மொழியை அவர்கள் மீது திணிக்க முயன்ற லீக் கட்சியினர், இன்று அவர்கள் இருந்த இடம் தெரியாது அழித்து ஒழிக்கப்பட்டிருக்கிறார்கள், வங்க மக்களால்; நாம், இங்கே நமது தாய்மொழி தமிழைக் காக்க இரண்டு பிணங்களை ஈந்து, பல்லாயிரவர் சிறை சென்றபோது, நம்மைப் பார்த்துக் கேலி பேசிய இந்தி மொழி வெறியர்கள், வங்கம் தந்துள்ள பாடத்தை அறிந்தாவது தங்கள் போக்கை மாற்றிக்கொள்வார்களா எனக் குறிப்பிட்டுவிட்டு, இன்னபிற அரசியல் நிலைகளையும் விளக்கிப் பேசினார்.

உருளைக்கிழங்குக்கு விற்பனை வரி

விலக்கு வேண்டுமென கோரிக்கை

சென்னை, ஏப் 8—

காய்கறிகளுக்கு விற்பனை வரி விதிக்கவில்லை யென்று, சென்னை வரவு—செலவுத் திட்டப் பேச்சில், சென்னை நிதி மந்திரி கொடுத்த வாக்குறுதியை யொட்டி, உருளைக்கிழங்குக்கும், வெங்காயத்துக்கும் விற்பனை வரி விதிக்க நடவடிக்கை எடுத்துக் கொள்ளக் கூடாதென்று வர்த்தகவரி கமிஷனருக்கு தென் இந்திய வர்த்தக சபை கடிதம் எழுதியிருக்கிறது.

இதுவரையில் மத்திய சர்க்காரால் ஏற்றுமதி, இறக்குமதி வர்த்தகத்தில் உருளைகிழங்கும் வெங்காயமும் காய்கறி வகையிலேயே சேர்க்கப்பட்டனவென்றும், ரயில்வே போக்குவரத்தில் விரைவில் கெட்டுவிடக் கூடிய காய்கறி வகைகளிலேயே இவை களைச் சேர்த்துள்ளதாகவும் கூறி, வரிவிலக்கு இவைகளுக்குத் தரவேண்டுமென்று சர்க்காரை வர்த்தக சபை கேட்டுக்கொள்கிறது.

* * *

சேலம் வ. உ. சி. மார்க்கெட் வியாபாரிகள் சங்கத் தீர்மானம்

5—4—54ல் மேற்படி சங்கக் கூட்டம், கே. எஸ். காதர்மைதீன் தலைமையில் கூடி, உருளைக்கிழங்கு, வெங்காயம் இவைகளுக்கு வரிவிலக்களிக்காமல் இருப்பதற்கு தங்கள் எதிர்ப்பைத் தெரிவித்துக்கொண்டதுடன், சர்க்காருக்கும் அறிவித்தனர்.

நகைகள்மீது விற்பனை வரி உயர்வு

காரைக்குடி வியாபாரிகள் சங்கக் கண்டனம்

1—4—54 காலை 9 மணிக்கு, காரைக்குடி, காசுக்கடை—செட்டின வியாபாரிகள் சங்கக் கூட்டம், திரு. அ. ச. அ. நடராசனார் தலைமையில் நடைபெற்றது. 1954—55-ம் ஆண்டிற்கு நகைகள்மீது அதிக வரி விதிக்க சர்க்கார் உத்தேசித்திருக்கும் நடவடிக்கையைக் கைவிடும்படி கோரியும், சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்குத் தந்தி மூலமும் தெரிவிக்கப்பட்டது.

காரைக்குடி, பள்ளத்தூர், புதுவயல் ஆகிய இடங்களில் 3 நாட்கள் கடையடைப்பு நடைபெற்றது.

சினிமா தொழிலாளர் சங்க நிர்வாகிகள் தேர்வு

சென்னை, ஏப். 7—

சென்னை மாநில சினிமா தொழிலாளர் சங்கத்தின பொது உறுப்பினர் கூட்டம் 7—4—54 காலை 10 மணிக்கு சங்க அலுவலகத்தில் நடைபெற்றது. சங்கத் தலைவர் தோழர் பி. பாலசுப்பிரமணியம் கூட்டத்திற்கு தலைமை தாங்கினார். அதுபோது 53—54-ம் ஆண்டு வரவு செலவுக் கணக்குகள் ஏற்றுக் கொள்ளப்பட்டு, 1954—55 ஆண்டுக்கான நிர்வாகிகளாகத் தோழர்கள் பி. பாலசுப்ரமணியம் தலைவராகவும், டி. ஆர். கோகுலகிருஷ்ணன் துணைத் தலைவராகவும், கே. ஏகாம்பரம் செயலாளராகவும் இன்னும் உதவிச் செயலாளர் பொருளாளர், ஒன்பது செயற்குழு உறுப்பினர்கள் ஆகியோரும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

இந்தியாவுக்குக் 'காமட்' பஸ்கள்

திரு—கொச்சி சர்க்கார் லண்டன் காஷபர் லேலண்டு மோட்டார் நிறுவனத்திடமிருந்து 50 'காமட்' டீசல் பஸ்களை வாங்க நிச்சயித்திருக்கிறது. இவை வந்ததும், சமஸ்தானத்தில் சர்க்கார் போக்குவரத்திலுள்ள பெட்ரோல் வண்டிகளுக்குப் பதிலாக ஓடும். பம்பாய் நகர சபையும், லேலண்டு நிறுவனத்திடம் சில மோட்டார்களுக்கு 'ஆர்டர்' கொடுத்திருக்கிறது.

கொலப்பா தி. மு. கழகம்

பம்பாய், ஏப்ரல் 13—

கொலபா தி. மு. க. சொற்பயிற்சிக் கூட்டம் 10, 19, 24—3—54 ஆகிய நாட்களில் முறையே தோழர்கள் கே. எஸ். ஜெகநாதன், டி. எஸ். தம்பித்துரை, டேவிட் அருணசலம் தலைமையில் நடைபெற்றது அதுபோது தோழர்கள் எஸ். பி. பெருமாள், ஆர். கண்ணையா, எஸ். கே. ராஜூ, ஏ. எஸ். அன்பரசு, ஆர். ஜி. ஜார்ஜ், கே. கே. இராமநாதன் பேசினர்.

கழகக் கூட்டங்கள்

★

வெங்கடாசலபுரம் (ஊவனூர்)

12—4—54 மாலை 6 மணிக்கு

இடம்: வ. உ. சி. திடல்

தலைவர்: டி. பி. இராமசாமி

பேசுவோர்:

அ. பொன்னம்பலனார்

எம். எஸ். மணி

எம். நடேசன்

★

குறிஞ்சிப்பாடி

13—4—54 மாலை 6 மணிக்கு

தலைவர்: கு. த. பே. பழனியப்பன்

பேசுபவர்:

என். எஸ். இளங்கோ

முத்தமிழ்க் கலை வளர்ச்சி மன்ற அமைப்புக் கூட்டம்

திருப்பூர், ஏப். 10—

11—4—54 காலை 10 மணி அளவில், பல்லடம் ரோடு, 'திராவிடப் புத்தக பூங்கா' நிலையத்தில், தோழர் சிந்தனைச் செல்வன் தலைமையில் நடைபெறும். அதுபோது செயற்குழுத் தேர்தல் நடைபெறுவதுடன், மன்றத்தின் ஆக்க வேலைகள் குறித்து ஆலோசிக்கப்படும்.

இது நியாயமா?

எட்டு மாதத்திற்குப் பின்னர் அபராதத் தொகை வசூலிப்பு

திருவண்ணாமலை, ஏப். 10—

15—7—54-ல், திருவண்ணாமலையில், ரயில் நிறுத்தப் போராட்டத்தில் தோழர் ப. உ. சண்முகம் குழுவினர் கைது செய்யப்பட்டு, ஆகஸ்டு மாதத்தில் வழக்கு விசாரணை செய்யப்பட்டு, ரூ 2 அபராதமும், கட்டத் தவறினால், கோர்ட் கலையும் வரை சிறைத் தண்டனையும் விதிக்கப்பட்டது. தோழர்கள் அபராதம் கட்ட மறுத்து சிறை தண்டனை அனுபவித்தனர். அதன் பின்னர், 8-வது மாதத்தில் அபராதத் தொகையை 4—4—54 முதல் கட்டாயமாக வசூல் செய்து வருகிறார்கள்.

ஆலைத் தொழிலாளர் உறுப்பினர் தேர்தல்

புகளூர், ஏப். 6—

புகளூர் சர்க்கரைத் தொழிலாளர் சங்கப் பொதுக் கூட்டம் 4—4—54 மாலை 5 மணிக்கு தோழர் கே. ராமசாமி தலைமையில் நடைபெற்றது. 1954-55ம் ஆண்டிற்கு தோழர்கள் டி. எம். நல்லுசாமி தலைவராகவும், டி. பி. துணைத் தலைவராகவும், வீ. ராமையா செயலாளராகவும், எஸ். தியாகராசன் துணைச் செயலாளராகவும், ஏ. முத்துசாமி பொருளாளராகவும், மற்றும் 10 பேர் செயற்குழு உறுப்பினராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

திரு. வி. க. மன்ற துவக்க விழா பொதுக்கூட்டம்

காட்டுமன்னார் கோவிலை அடுத்த நாட்டார் மங்கலம் என்ற கிராமத்தில் 3—4—54 மாலை 6 மணிக்கு அழகிரி திடலில், திரு. அரு. கோவிந்தன் தலைமையில், திரு. வி. க. மன்றத்தின் துவக்க விழா பொதுக்கூட்டம் நடைபெற்றது. தலைவர் முன்னுரைக்குப் பின், தோழர்கள் எல். என். இராமலிங்கம், இரத்தினம், இராசமாணிக்கனார், ஆ. வேலாயுத தாசன் ஆகியோர் மன்றத்தின் அவசியம் பற்றி சொற்பொழிவாற்றினர்.

இந்தோ-சீனு நிலைமை: நெருக்கடி முற்றுகிறது!

'நேரடி நடவடிக்கை' ஏற்படுமா?

அமெரிக்கக் குற்றச் சாட்டு — ரஷ்யா மறுப்பு

லண்டன், ஏப். 8—

இந்தோ—சீனப் போரில் அமெரிக்கா நேரடியாகக் கலந்து கொள்ளக்கூடும் என்று தோன்றுவதாகக் கூறப்படுகிறது. இந்தோ — சீனுவுக்குக் கடல், விமானப் படைகளை அமெரிக்கா அனுப்பினால், சீனவும் இராணுவத்தை அனுப்பும் என்றும், பின்னர் அமெரிக்கா தரைப் படைகளையும் அனுப்ப நேரிடும் என்றும் குறிப்பிடப்படுகிறது.

இந்தோ—சீனு, கம்யூனிஸ்டுகள் வசமாவதை அனுமதிக்க முடியாது என்று ஐசன்ஹவரும், டல்லசும் கூறியிருக்கின்றனர்.

இந்தோ—சீனப் போர்க்களத்தில் லீ-சென்-ஹூ என்ற சீன தளபதி வியட்மின் படையுடன் இருப்பதாக டல்லஸ் கூறியதை ரஷ்ய கம்யூனிஸ்டு கட்சி பத்திரிகை மறுத்துள்ளது; இந்தப் பெயருள்ள சீனத் தளபதி எவருமே இல்லை என்று அது கூறுகிறது.

"ஜெனிவா மாநாட்டுக்கு முன் சூழ்நிலையைக் கெடுக்கவும், சர்வதேச நெருக்கடியை அதிகரிக்கவுமே டல்லஸ் இந்த அப்பட்டமான அவதூறை" தெரிவித்ததாக அது குற்றஞ் சாட்டுகிறது.

எதிர்ப்பு

சிட்னி, ஏப். 8—

இந்தோ — சீனுவுக்குக் கப்பலில் யுத்த தளவாடங்களை ஏற்ற சிட்னி துறைமுகத் தொழிலாளர்கள் மறுத்துவிட்டனர். அக்கிரமதாரர்களில் ஆஸ்திரேலியா ஈடுபடக் கூடாதென்றும், சமாதான காலத்தில் ஆயுதம் ஏற்ற முடியாதென்றும், ஆயுதங்களை ஏற்றுவது அபாயகரமான வேலை என்றும் அவர்கள் தெரிவித்தனர்.

தொழிலாளரின் பகிஷ்காரம் நீடித்தால், தளவாடங்களை ஏற்ற துருப்புகள் உபயோகிக்கப் படலாம் என்று தெரிகிறது.

குவிகின்றன!

சைகோன், ஏப். 8—

கடந்த 3 தினங்களில் ஏராளமான அமெரிக்க வெடி விமானங்களும் போக்குவரத்து விமானங்களும் இந்தோ—சீனுவுக்கு வந்து சேர்ந்துள்ளன.

படை திரட்டுகிறார்!

பாரிஸ், ஏப். 8—

இந்தோ — சீனப் படையெடுப்பை முறியடிக்க கம்போடியா மன்னர் தனது நாட்டில் படை திரட்ட உத்திரவிட்டிருக்கிறார்.

டல்லஸ் திடீர் திட்டம்

லண்டன், ஏப். 8—

அமெரிக்க வெளிநாட்டு காரியதரிசி டல்லஸ் வரும் வாரத்தில் லண்டன், பாரிஸ் ஆகிய இடங்களுக்குச் சென்று, ஜினிவா மாநாடு பற்றியும் இந்தோ—சீனு பற்றியும் பேச்சுவார்த்தை நடத்துவார் என நம்பகமாகத் தெரிகிறது.

அம்பலமாகிறது!

வாஷிங்டன், ஏப். 8—

நீர்வளிக் குண்டு உற்பத்திக்கு ஏராளமான செலவு செய்ய நேரிடும், பலாக அணு ஆயுதங்களையும் அமெரிக்கா குவித்துக்கொண்டிருக்கிறது என அணுசக்திக் குழுத் தலைவர் அறிவித்துள்ளார்.

ஆண்டு விழாக்கள்

கீரனூர் கழக உயர்நிலைப் பள்ளி மாணவர் மன்ற ஆண்டு விழா 28—3—54 மாலை 4-30 மணிக்கு பச்சையப்பன் கல்லூரி பேராசிரியர் க. அன்பழகன் எம். ஏ., தலைமையில் கொண்டாடப்பட்டது. தலைமைத் தமிழாசிரியர் வரவேற்புரையாற்றினார். தலைவர் முன்னுரையாற்றி நாட்டாண்மைக்கழகத் தலைவர் திரு இராசா சிதம்பரம் எம். எல். ஏ., அவர்களின் படத்தையும் திறந்துவைத்தார். பின்னர், மாணவ மாணவிகளால், நாடகம், நடனம் முதலியன நிகழ்த்தப்பெற்றன. முடிவில் தோழர் அன்பழகனார் மாணவர்கள் கடமையை விளக்கிப் பேசி, பரிசுகள் வழங்கினார்.

* * *

பெண்ணாடம் கழக உயர்நிலைப்பள்ளி ஆண்டு விழா 4-4-54ல், தென்னார்க்காடு கலெக்டர் திரு. உத்தண்டராமன் தலைமையில் நடைபெற்றது. திரு. முத்தமிழனார் வரவேற்றார்; திரு. ஆ. கோவிந்தசாமி ஆண்டறிக்கை வாசித்தார்; திரு வீ. உலகநாதயர் "தமிழுக்குக் கதியாவர்" என்பது பற்றி சொற்பொழிவாற்றினார். திரு. ச. சி. சிவராமசேது அவர்கள் நன்றி கூறினார். இரவு "கட்டபொம்மன்" என்ற நாடகம் நடைபெற்றது. பெண்ணாடம் ஊராளும் மன்ற உறுப்பினர் திரு. ஞானப்பிரகாசம் தலைமை தாங்கிப் பாராட்டினார்.

நீர்முளை தி. மு. கழகத் துவக்க விழா

திருத்துறைப்பூண்டி தாலுக்கா நீர்முளையில், 4—4—54ல் தி. மு. கழகம் துவக்கப்பட்டது. தோழர் வை. சுப்ரமணியன் தலைமையில் கூட்டம் நடைபெற்றது. தோழர் க. குஞ்சிதபாதம் தி. மு. கழகக் கொடியேற்றி வைத்தார். பின்னர் நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்:— என். காளிமுத்து—செயலாளர்; என். அப்துர்ஹமீது—துணைச் செயலாளர்; எம். எம். அப்துல்லா — பொருளாளர்; பி. என். கோவிந்தராசன் — மாவட்டப் பிரதிநிதி; மற்றும் 11 பேர் செயற்குழு உறுப்பினர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

கம்பம் தி. மு கழகம் பொதுக்கூட்டம்

பரவை, ஏப். 10—

கம்பம் தி. மு கழக சார்பில், 4—4—54 இரவு 8-30 மணிக்கு தோழர் பாண்டியன் தலைமையில் ஓர் பொதுக்கூட்டம் நடைபெற்றது. தோழர் எம். சிக்கந்தர் பேசுகையில் கம்பம் பஸ் நிலையத்தை வேறு இடத்துக்கு மாற்றுவது மக்களுக்குத் தொல்லையாகும் என்றார்.

அடுத்து, தோழர் நெடுஞ்செழியன் அவர்கள் பேசுகையில், புதிய ஆரம்பக் கல்வித் திட்டத்தை எதிர்த்தும், தற்கால அரசியல் நிலை குறித்தும் பேசினார்.

கைத்தறி அபிவிருத்தி

மைசூர் சர்க்காருக்கு இந்திய சர்க்கார் கடன்

பெங்களூர், ஏப். 8—

கைத்தொழிலபிவிருத்திக்காக இந்திய சர்க்கார், மைசூர் மாநில சர்க்காருக்கு ரூ 57,500 கடன் அனுமதித்திருப்பதாகத் தெரிகிறது.

நாகர்கோவில் தி. மு. கழகம்

இதுவரையில் வடசேரி-அசம்பு ரோட்டில் இருந்துவந்த நா. மா. தி. மு. கழக தலைமை அலுவலகம், தற்போது, நாகர்கோவில் எஸ். எம். டி. கட்டிட மேல் மாடிக்கு மாற்றப்பட்டிருக்கிறது.

சுங்க அதிகாரி தாக்கப்பட்டார்!

—:o:—

வடநாட்டு வியாபாரி கைது செய்யப்பட்டார்!

ரூ 28,000 சொத்துக்கள் கைப்பற்றப்பட்டுள்ளது!

காரைக்குடி, ஏப்ரல் 7—

இன்று, இந்நகர் புதுத்தெருவிலுள்ள இராஜேஸ்வரி விலாஸ் என்ற கட்டிட மேல்மாடியிலுள்ள பிரபல வடநாட்டு வியாபாரியான மாதவலால் என்பவரின் வியாபாரக் கடையை திடீரென மதுரை சுங்க இன்ஸ்பெக்டர் ஜேம்ஸ் சோமசுந்தரம் பி. ஏ., எல். டி. அவர்கள் சோதனையிட்டார்.

சோதனையிடும்பொழுது வடநாட்டு வியாபாரி மாதவலாலுக்கும், அதிகாரிக்கும் ஏற்பட்ட கைகலப்பில், அதிகாரியின் மூக்கில் மாதவலால் குத்திவிட்டதால் மூக்குக் கண்ணாடி உடைந்து மூக்கில் காயம் ஏற்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

பின்னர், சோதனையிட்டதில், சந்தேகத்தின்பேரில் சுமார் 28,000 ரூபாய் மதிப்புள்ள (60 காரட்) வைரங்கள் வைர நகைகள், பச்சை, சிகப்பும் போன்ற நவரத்தினங்கள் முதலியவைகளும், ரிஸ்ட் வாட்சு ஒன்றும், கணக்கு புத்தகங்களும், கைப்பற்றப்பட்டுள்ளதாகத்தெரியவருகிறது.

ஸ்தலத்திற்கு காரைக்குடி சர்க்கிள் திரு அலிசுல்தானும், காரைக்குடி டிவிஷன் போலீஸ் சப்-இன்ஸ்பெக்டர் திரு. நந்தேனியும் பாதுகாப்புக்கு வந்திருந்தனர்.

இரவு 9 மணி அளவில் மாதவலாலும், அவர் கம்பெனியைச் சார்ந்த மற்று நால்வரும் கைது செய்யப்பட்டு போலீஸ் ஸ்டேஷனுக்கு அழைத்துச்செல்லப்பட்டு, இரவு 3 மணி அளவில் ஜாமீன் பேரில் விடுதலை செய்யப்பட்டுள்ளார்கள் எனத் தெரிகிறது.

அதிகாரியைத் தாக்கிய குற்றத்திற்காக மாதவலால் மீதும் அவரைச் சார்ந்த மற்ற நால்வர் மீதும் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. போலீசார் மேலும் புலன் விசாரித்து வருகின்றனர். (ந. நி)

தானியங்கள் மீது கட்டுப்பாடு

எடுபடும் என அறிவிப்பு

பம்பாய், ஏப். 9—

உணவு தானியங்கள் மீதுள்ள சில கட்டுப்பாடுகள் தற்காலிகமானவை; அவையும் வெகு சீக்கிரத்தில் எடுக்கப்பட்டு விடுமென்று மத்திய சர்க்கார் உணவு மந்திரி தெரிவித்தார்.

ஆலோசிக்கின்றனர்!

பம்பாய், ஏப். 9—

தொழிலாளர் இன்ஷூரன்ஸ் திட்டத்தைத் தொழிலாளர்களும் பங்களுக்கும் விஸ்தரிப்பது பற்றி சர்க்கார் ஆலோசித்து வருவதாக மத்திய சர்க்கார் தொழிலாளர் நல இலாகா மந்திரி வி. வி. கிரி இங்கு தெரிவித்தார்.

மண்டபம், தட்டப்பாறை குவாரண்டைன் விடுதிகள்

மூடிவிட ஆலோசனை

கொழும்பு, ஏப். 9—

மண்டபம், தட்டப்பாறை ஆகிய இடங்களில் உள்ள இலங்கை குவாரண்டைன் விடுதிகளை மூடிவிடுவதையும், திருச்சிராப்பள்ளியில் உள்ள இலங்கைத் தொழிலாளர் கமிஷனரை வாபஸ் பெறுவதைப் பற்றியும் இந்திய சர்க்கார் ஆலோசித்து வருவதாகத் தெரிய வருகிறது.

ஆச்சாரியார் ஆட்சியில் மந்திரிகள்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

"தம்முடைய சொந்த எண்ணங்களோடு பெரும் காதல் கொள்ளும்படியான இறுமாப்பு அவருக்குக் கிடையாது; சிறு செயல்களாய் இருந்தாலும் சரி, பெருஞ் செயல்களாயிருந்தாலுஞ் சரி, திரு. காமராசர், தம்முடைய கட்சி உறுப்பினர்களையும், கட்சிக்கு வெளியே உள்ள பொதுநல ஆர்வம் உடையவர்களையும் கலந்து ஆலோசனை செய்து அதன்படி நடக்கும் இயல்புடையவர்.

"அவர் ஒரு பண்டிதர் அல்ல என்ற காரணத்தினால், புதிது புதிதான கருத்துக்களை அல்லது கதைகளைச் சொல்லி, பொது மக்களுடைய கவனத்தைத் திருப்பித் தம்முடைய புகழை மிகுதியாக்கிக்கொள்ள இயலாவிட்டால், அதற்காக அவர் வருந்தமாட்டார்.

"பல இன்னல்களுக்கிடையே பொருளாதாரத் துறையில் முன்னேறி வெற்றி பெற்ற சமூகத்தைச் சேர்ந்தவராகையால், அவர் கூரிய அறிவும், அனுபவமும் கொண்டவராய் இருக்கிறார்.

"ஆகையால் உன்னதமான திட்டங்களிலும், கோட்பாடுகளிலும், அவர் தம்மை இழந்துவிடாமல் மக்களுடைய வாழ்க்கையைச் சீர்திருத்திச் செம்மைப்படுத்தும்படியான துறையில் முயற்சி செய்வார் என்று எதிர்பார்க்கலாம்."

"திரு. இராசகோபாலாச்சாரியார் பதவியிலிருந்து விலகியதன் காரணமாகச் சென்னை மாகாணத்தில் திரு. காமராசரைத் தலைவராகக் கொண்ட ஒரு புதிய அமைச்சரவை ஏற்பட்டு இருக்கிறது.

புதிய முதலமைச்சர், பழைய முதலமைச்சரைவிட எவ்வளவு மாறுபட்டிருக்க முடியுமென நாம் நினைக்கலாமோ அவ்வளவு மாறுபட்டவராவர்; பொதுமக்களில் ஒருவராய் இருந்தவர்; முன்னணி வகுப்புக்களில் இருந்த ஒருவருடைய பெரும் பதவிக்கு வந்திருக்கிறார்.

சாதாரண மக்களிடையே தோன்றிய ஒருவர், பிறப்பு, கல்வி, அறிவு, அனுபவம் முதலியவற்றால் உயர்குடி மகனாய் உள்ள ஒருவருக்குப் பின் தோன்றலாகப் பதவி ஏற்கிறார்.

தம்முடைய கட்சியோடும், காங்கிரசு அரசியல் அமைப்போடும் அன்றாடம் நெருங்கித் தொடர்பு கொண்டுள்ள ஒருவர், சென்ற சில ஆண்டுகளாகவாவது அத்தொடர்பு இல்லாமல், தம்முடைய சொந்த எண்ண உலகத்திலேயே உலாவிய ஒருவருக்கு வழித்தோன்றலாக அமைகின்றார்.

பெரும்பாலான மக்களுடைய தேவைகளுக்கும், விருப்பங்களுக்கும் செவிசாய்க்கும் தன்மை வாய்ந்த ஒருவர், தம்முடைய எண்ணங்களின் மேம்பாட்டைப்பற்றி உறுதியான முடிவுகொண்டு பெரும்பாலான மக்களின்மேல் அவைகளைச் சுமத்த முயற்சி செய்த மற்றொருவருடைய பதவிக்கு வந்திருக்கிறார்.

"முன் இருந்த முதலமைச்சர், தம்முடைய கட்சியின் நம்பிக்கையையும், ஆதரவையும் தொடர்ந்து பெறுவதில் தோல்வியுற்றதற்கு இதுதான் முக்கிய காரணம்.

"அவரால், 'கட்சித் தலைமைப் பதவிக்குத் தமக்குப் பின்னால் வருவதற்குத் தக்கவர்' என்று நிறுத்தப்பட்டவர் அடைந்த பெரும் தோல்விக்கும் இதுவே காரணம்.

"தம்முடைய கட்சிக்கும், நாட்டுக்கும் அவர் பெரும் தொண்டு செய்திருக்கபோதிலும், அவர் பதவியிலிருந்து விலகவேண்டியதாயிற்று.

"நிருவாகத் துறையில் அவர் செய்த பல நியமனங்கள் ஒழுங்கானவையா, அல்லவா என்பதை இப்பொழுது நாம் ஆராய விரும்பவில்லை. ஏனென்றால் அவைகளைப் பற்றி மாறுபாடான கருத்துக்களைக் கொள்ளக்கூடும்.

"ஆனால், தம்முடைய கட்சியிலாவது, சட்டசபையிலாவது உறுப்பினராய் இல்லாத ஒருவரை அமைச்சராய் நியமித்தது தம்முடைய கட்சியினரின் விருப்பத்திற்கு எதிரிடையாக இருந்தது. ஏனென்றால், காங்கிரசுக் கட்சிக்குள் அரிசன உறுப்பினர், அதுவும் முன்னர் அமைச்சராயிருந்தவரும், பெண் உறுப்பினர்களும் இருக்கும்பொழுது இவ்விதம் செய்தது முற்றும் ஒழுங்கல்ல என்று அவர்கள் நினைத்தார்கள்.

மீண்டும் டில்லிக்குச் செல்கிறார் காமராசர்!

சென்னை, ஏப். 10—

மந்திரி சபை அமைக்கும்படி சென்னை கவர்னரால் அழைக்கப்பட்டுள்ள கே. காமராசர், புது மந்திரி சபை பட்டியலுடன், 11-ந் தேதி இரவு விமானத்தின் மூலம் டில்லிக்குச் சென்று, மந்திரிகள் பற்றி மேலிடத்தாருடன் கலந்தாலோசிப்பார்.

மந்திரி சபை பட்டியல் அநேகமாக பூர்த்தியடைந்து விட்டதாகவும், மந்திரி சபையில், திரு சி. சுப்பிரமணியத்தையும் சேர்த்துக்கொள்ள முயற்சிகள் நடைபெறுவதாகவும் கூறப்படுகிறது.

சென்னை மேல் சபைத் தேர்தல்

உள்ளாட்சித் தொகுதியில் முடிவு

சென்னை, ஏப். 8—

சென்னை மேல் சபைக்கு செங்கற்பட்டு—வட ஆற்காடு—சென்னை உள்ளாட்சி கழகத் தொகுதிக்கு மூன்று ஸ்தானங்களுக்கு டி. வி. தேவராஜ முதலியார், பெருமாள்சாமி செட்டியார், டி. புருஷோத்தம முதலியார், நாதமுனி நாயுடு ஆகிய நால்வர் போட்டியிட்டனர். பதிவான வோட்டுகள் 747-ல் செல்லுபடியான ஓட்டுகள் 735.

அதில் தேவராஜ முதலியார் 201 ஓட்டுகளும், பெருமாள்சாமி செட்டியார் 191 ஓட்டுகளும், புருஷோத்தம முதலியார் 189 ஓட்டுகளும் பெற்றுத் தேர்ந்தெடுக்கப்பட்டனர். நாதமுனி நாயுடு தோல்வியுற்றார்.

சலுகைகள் காட்டியும் மூலதனமில்லையே!

நியூயார்க், ஏப் 8—

தனிப்பட்டோர் முதலீடு செய்து தொழிற்சாலைகள் ஆரம்பிக்க இந்திய சர்க்கார் எவ்வளவோ சலுகைகள் காட்டியும், இந்தியாவில் வந்துள்ள வெளிநாட்டாரின் தனிப்பட்டோர் மூலதனம் மிகக் குறைவென்று ஐ. நா. பொருளாதார சமூகக் கவுன்சிலின் பேசுகையில் இந்தியப் பிரதிநிதி சாக்சேனா கூறினார்.

தொழில் துறை...

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

அவர் மேலும் கூறியதாவது:—

"தொழில்களைத் தீவிரமாக நிர்மாணித்தால்தான், நமது மக்களின் வாழ்க்கைத் தரத்தைக் குறுகிய காலத்திற்குள் உயர்த்த முடியுமென்பது என்னுடைய அசைக்கமுடியாத நம்பிக்கையாகும்.

"விவசாயம், நமது மக்களுக்கு முழு நேரமும் வேலையளிக்க உதவாது. வேறு வேலைகளை மேற்கொள்வதற்கான ஓய்வு அவர்களிடம் நிறைய இருக்கிறது. நாடு முழுவதிலும் தொழிற்சாலைகளை நிர்மாணித்து அந்த ஓய்வைப் பயன்படுத்த அவர்களுக்கு வாய்ப்பளிக்க வேண்டும்."

தொழில் துறை ஈடுபாடானது, அதற்கே உரித்தான கவர்ச்சியையும் சிறப்பாகக் கொண்டிருக்கிறது. தொழில்களில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்கள், கூடிய வரையில், தற்காலம் குறிப்பிடத் தகுந்த வசதியும் பெற்று வருகின்றனர். அதுவுமன்றி அவர்களுக்குள்ள புதிய தொழில் பழக்கத்தினுடைய ஆக அறிவியல் வளர்ச்சி பெறவும் வாய்ப்பேற்படுகிறது. மேலைநாடுகளில் சரிபகுதி மக்கள் நவீன தொழில்களில் ஈடுபட்டிருந்தபோதிலும், தொழில் ஏற்பாட்டின் அவக்க காலத்தில் இப்பொழுது வேலை செய்யும் எண்ணிக்கையில் சிறு தொகையினரே அத்தொழில்களில் ஈடுபட்டனர். கால வளர்ச்சியில் ஏற்பட்ட முன்னேற்றமாகும் அது. எனவே, நாமும் இப்பொழுதே தொழில் ஆக்கத்திற்கு அடிகோலினாலல்லாது, மற்ற நாடுகளைப்போல தொழில் துறையில் முன்னேற்றங்காண முடியாது."

தகராறுகள் தீர்ந்தனவாம்!

சமரசமாயினராம்!

புதுடில்லி, ஏப். 9—

நிர்வாகத்தில் நீதி இலாகாவின் கட்டுப்பாடுகள் சம்பந்தமாகத் தமக்கும், நீதி மந்திரிக்குமிடையில் ஏற்பட்டிருந்த வேற்றுமைகள் அகற்றப்பட்டு விட்டன என்று "பார்லிமெண்டரி கட்சிக் கூட்டத்தில் நேரு" அறிவித்தார்.

நேருவுக்குப் பிறகு பேசிய தேஷ்முக், தம் ராஜினாமாவை வாபஸ் பெற்றுக்கொண்டு விட்டதாகவும் வேற்றுமைகள் நீங்கி விட்டதாகவும் குறிப்பிட்டுவிட்டு வேலைகள் துரிதமாக நடைபெற வேண்டுமென்ற நேரு கூறியதையும், விதிகள் திருத்தப்படவேண்டும் என்பதையும் தாமும் ஒப்புக்கொள்வதாகவும் கூறினார்.

காமெட் விமானப் போக்குவரத்து

உலகம் முழுவதும் நிறுத்தப்பட்டது

லண்டன், ஏப். 10—

உலகம் முழுவதும், 'காமெட்' விமானப் போக்குவரத்து நிறுத்தப்பட்டுள்ளது; இதன் விளைவாக பம்பாயிலிருந்து லண்டனுக்கு 'காமெட்' விமானத்தில் செல்லவிருந்த பிரயாணிகள் நிறுத்தப்பட்டனர்; கொழும்பிலிருந்து பம்பாய் வந்து சேரவேண்டிய விமானமும் கொழும்பிலேயே நிறுத்தப்பட்டுவிட்டது.

இவற்றுக்கெல்லாம் காரணம், 14 பிரயாணிகளும், 7 சிப்பந்திகளும் கொண்ட ஒரு காமெட் ஜெட் விமானம் காணவில்லை என்று பி. ஓ. ஏ. சி. அதிகாரிகள் அறிவித்ததின் எதிரொலியாகும்! இதற்கு முன் பல காமெட் விமானங்களுக்கு விபத்துக்கள் ஏற்பட்டுள்ளது; இடையில் அந்த காமெட் விமானங்கள் போக்குவரத்து தடை செய்யப்பட்டு, மீண்டும் அவக்கப்பட்டபோது தான், விமானமும் காணவில்லை என்று அறிவிக்கப்பட்டது.

நேபிள்சுக்கு 90-வது மைலில், அந்த விமானம் கடலில் விழுந்துள்ளதாகக் கூறப்படுகிறது. 6 சடலங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன; கடலில் பல பிரேதங்கள் மிதந்து கொண்டிருப்பதாக விமானங்கள் அறிவிக்கின்றன.

மாஹியில் விடுதலைப் போர்

மாஹி, ஏப் 9—

ஐந்தரை ஆண்டுகளாக காலிகள் கையோங்கியிருந்து, மக்கள் கஷ்டத்துடன் கட்டுப்பட்டிருந்த மாஹியில் விடுதலைப் போர் ஆரம்பமாயிற்று. இரு தொண்டர்களை வீதிவழியே காலிகள் இழுத்துச் சென்றனர்.

நடமாடாதே!

பிரெஞ்சு மாஹியிலும் அதைச் சுற்றிலுமுள்ள கொம்யூன்களிலும் கடைகளையும், கம்பெனிகளையும் இரவு ஒன்பது மணிக்குள் அடைத்துவிட வேண்டுமென்று நேற்று தண்டோரா மூலம் உத்திரவு பிறப்பிக்கப்பட்டது.

இரவு ஒன்பது மணிக்குப் பிறகு தெருக்களில் யாரும் நடமாடக்கூடாதெனவும், உத்திரவை மீறுபவர்களுக்கு அபராதமோ, சிறைத் தண்டனையோ அல்லது இரண்டுமோ விதிக்கப்படுமென்றும் உத்திரவு கூறுகிறது.

புதுவையில் போர்

டூப்ளே தெருவில், மீண்டும் விடுதலைப் போர் ஆரம்பமாயிற்று 60 தொண்டர்கள் அணிவகுத்துச் செல்லுகையில், பிரெஞ்சிந்தியப் போலீசார் 6 தொண்டர்களைக் கைது செய்தனர்.

நேற்று கைது செய்தவர்களில் 60 தொண்டர்களை பிரெஞ்சிந்திய அதிகாரிகள் விடுதலை செய்தனர்.

கைப்பற்றப்பட்ட திட்டுகள் நிலைமை

சென்ற வாரம் விடுதலை அடைந்த நெட்டப்பாக்கம், பாகூர் கொம்யூன்களில் போட்டி சர்க்காரை பிரெஞ்சிந்திய சோஷலிஸ்டு தலைவர்கள் ஆறுபேரும், மூதலுப் பிள்ளையும் ஸ்திரப்படுத்தி வருகிறார்கள்.

இதரப் பகுதிகளையும் கைப்பற்றத் திட்டமிட்டு வருவதாகத் தெரிகிறது.

வாக்கெடுப்பு அவசியமில்லை

ஒரு பிரெஞ்சுப் பகுதியின் நிர்வாகத்தை, வேறொரு பகுதிக்கு மாற்ற வேண்டுமானால், அந்தப் பகுதியில், பொதுமக்கள் வாக்கெடுப்பு நடத்தவேண்டிய அவசியமில்லை என்றும், வாக்கெடுப்பு இன்றியே நிர்வாகத்தை மாற்ற பிரெஞ்சு அரசியல் திட்டத்தில் அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது என்றும், காரைக்கால் ஐக்கிய இணைப்பு முன்னணி காரியதரிசி விடுத்துள்ள ஒரு அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

பிரெஞ்சு மக்கள் சார்பாக எல்லா தீர்மானங்களையும் பிரெஞ்சு சட்டசபை செய்கிறது; அதேபோல், பிரெஞ்சிந்திய மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட நகரசபைகளும், பிரெஞ்சிந்திய மந்திரி சபையும் செய்துள்ள தீர்மானம் பிரெஞ்சு சர்க்காரைக் கட்டுப்படுத்தும்.

இராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. செழியன், எம். ஏ., அவர்களால், அழகிரி அச்சகத்தில் அச்சிடப் பெற்று (24, நாராயண செட்டித் தெரு, இராயபுரம்) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: சி. என். அண்ணாதுரை, எம். ஏ.